# கந்தகெடிய பிரதேச சபை

## பதுளை மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 பெப்ரவரி 16 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்டம்பர் 27 ஆந் திகதி சபைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கந்தகெடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் போது நன்கொடை ஒன்றாகக் கிடைத்திருந்த டிரக்டர் வண்டியின் பெறுமதி ரூபா 1,155,318 தொகையினால் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுகளின் போது தீர்க்கப்படாதிருந்த ரூபா 25,164 தொகையினை திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமையால் சொத்துக்களின் பெறுமதி மற்றும் திரண்ட நிதியத்தின் பெறுமதி அதே தொகையினால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டணம் மீதி ரூபா 139,410 தொகையினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிர்மாண வேலைகளுக்காக ரூபா 120,507 தொகையினால் மிகையாகக் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சனிக்கிழமை வாராந்த சந்தை வளவினை வாடகைக்கு எடுப்பதற்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 20,000 தொகைக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------------

சபையினால் சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 10,678,074 தொகை ஆகக் காணப்பட்டதுடன், அத் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 13,623,377 ஆக இருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது இருப்புப் பதிவேடு பேணப்படவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

--------------------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) 180 ஆம் விதி | பிணை வைக்க வேண்டிய 09 உத்தியோகத்தர்களினால் ரூபா 29,000 தொகை பிணை வைப்புச் செய்திருக்கவில்லை. |
| (ii) 218 ஆம் விதி | 2015 ஆண்டிற்கான காணி, கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 371 | சபையினால் 04 சந்தர்ப்பங்களில் பல்வேறு சாராருக்கு செலுத்தியிருந்த முற்பணம் ரூபா 67,500 தொகை 2015 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. |
| (ii) நி.பி. 571 | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காலங்கடந்துள்ள ரூபா 69,566 தொகை பெறுமதியான 41 வைப்புக்களை ஆதனவளிப்புச் செய்திருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் தாபன வதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயம் 1:6 மற்றும் 4 ஆம் பிரிவுகள் | பிரதேச சபையில் கடமையாற்றிய ஓய்வு பெற்றுள்ள, இறந்துள்ள 03 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் ரூபா 5,247 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 04 கணனிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைக் கருவிகள் தொடர்பாக கணனி துணைக்கருவிகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1985 இன் 01 கொண்ட (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1985 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | 2001 திசெம்பர் மாதம் முதல் 2013 அக்டோபர் வரையான காலப்பகுதி தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை குறிப்பிட்ட தினத்தில் செலுத்தப்படாமையால் 2015 ஆண்டின் போது 05 சந்தர்ப்பங்களில் ரூபா 53,184 தொகை மிகை விதிப்பு ஒன்று செலுத்தப்பட்டிருந்தது. |

2. நிதி மீளாய்வு

-------------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்க்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,633,121 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,103,181 ஆக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வருமானம் சேகரிக்கும் செயலாற்றல்

-------------------------------------------------------------

(அ) 2015 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலுவை வருமானத்தை சேகரித்தல் முன்னேற்றம் 5 சதவீதம் முதல் 13 சதவீதம் வரை பலவீன நிலையில் காணப்பட்டது.

(ஆ) 2010 ஆண்டு முதல் தொடர்ச்சியாக 05 வாடகையாளரிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 130,614 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 1988 இன் 56 இலக்கம் மற்றும் 2000 இன் 52 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 49 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 52 நெல் ஆலைகள் மற்றும் 03 கற்குழிகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் வருடாந்த வர்த்தக அனுமதிப்பத்திரம் மாத்திரம் பெற்றிருந்தார்கள்.

2.2.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 1,227,228 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 772,050 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு முரணாக செயற்பட்டு 2015 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்கள் 42 பேரின் சம்பளத்தின் மீது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 11,250 தொகைக்கான முத்திரைக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 1996 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை 2015 அளவிலும் சிட்டையிடப்பட்டிருந்தது.

(இ) 2008 ஆண்டு முதல் ஊழியர் சம்பளத்தில் இருந்து கழிக்கப்பட்ட ரூபா 422,446 தொகையான பங்களிப்புத் தொகை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படாமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-----------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுடன் இணக்கஞ் செய்யும் போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-------------------------------------------------

2006 அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் அத்தியாயம் 4 பந்தி 4.2 இன் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனங்களும் வருடாந்தம் பெறுகைகள் திட்டமொன்று தயாரித்து பயன்படுத்தப்பட வேண்டும் எனினும், பிரதேச சபையினால் நடைமுறை ஆண்டின் போது அவ்வாறு செய்திருக்கவில்லை.

4.3 உள்ளகக் கணக்காய்வு

----------------------------------

2015 ஆண்டிற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்தல்

-----------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு